மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வளாகங்கள் (அதிகாரமளிக்கப்படாத கையுடைமையாளர்களை வெளியேற்றுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அ.ஆ) தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) எண் 2 சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) எண் 2 சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2010), 26-7-2010 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டத் திருத்தத்தை நிராகரிப்பது குறித்து திரு. செ.ம. வேலுசாமி கொண்டுவந்துள்ள தீர்மானத்தை முன்மொழியலாம்.

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"26-7-2010 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2010) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

2010 நவம்பர் 12]

திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழியலாம்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) எண் 2 சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் அவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற வளர்ச்சித் துறை மூலமாக, உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்ற செயல், செயல்படுத்தப்படும்போது, பொது மக்கள், வியாபாரிகள், சாதாரணமாக இருப்பவர்களுக்கு ஒரு மாற்று வழியைச் செய்துவிட்டு இதைச் செய்வதுதான் சரியாக இருக்கும். அதற்கான சட்ட முறைகள் இதில் இல்லை. மேலும், நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள தடையாணைக்கு சரியான தீர்வு காணப்பட வேண்டும். விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டடங்கள் மற்றும் ஆக்கிரமிப்புகளை உடனடியாக முறைப்படுத்த வேண்டும். மேற்கூறிய செயல்களில் காலதாமதத்திற்கு வழிவகுக்கும் இச்சட்டமுன்வடிவினைக் கைவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

@ 12–11–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி பெறாமல் மற்றும் அனுமதி மீறி கட்டப்பட்ட கட்டடங்களை வரன்முறைப்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் 1999 ஆம் ஆண்டு அரசானது அதை வரன்முறைப்படுத்துகின்ற திட்டத்தைக் கொண்டுவந்தது. அதைத் தொடர்ந்து 2000 ஆம் ஆண்டு அது நீட்டிப்பு செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் பேசினார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் நீட்டிக்கப்பட்டது. ஆனால் நுகர்வோர் நடவடிக்கைக் குழு, என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் இதை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தால் 1999, பிப்ரவரி 28 ஆம் தேதிக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டடங்கள் மட்டுமே வரன்முறையில் சேர்க்கப்படும், மற்றவையெல்லாம் நீக்கப்படும் என்று நீதிமன்றம் தெரிவித்த காரணத்தால், அதற்குப் பிறகு ஏற்பட்ட நிலைமைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். இங்கு ஒரு அவசரச் சட்டத்தை கொண்டுவந்தோம். அதையும் எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அதற்குப் பிறகு நீதிமன்றத்திலே அந்த அவசரச் சட்டத்தை இரத்து செய்தார்கள். அதை அடுத்து அரசு உச்ச நீதிமன்றத்திலே முறையீடு செய்தது. உச்ச நீதிமன்றத்திலே முறையீடு செய்தபோது, உச்ச நீதிமன்றம் மறு உத்தரவு வரும் வரை தற்போதைய நிலை தொடரும் என்றும், மேலும் மனுதாரர் வரன்முறைப்படுத்துவதற்கு எந்தவித உத்தரவினையும் இடைக்காலத்திலே பிறப்பிக்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் இந்த இடைக்காலத் தீர்ப்பை வழங்கியது. அதற்கு அடுத்தபடியாக, இந்த நகர்ப்புற ஊரமைப்புச் சட்டத்திலே நல்ல பல மாற்றங்களைக் கொண்டுவந்து விதிகளை எளிமையாக்க வேண்டும் என்ற நோக்கத்திலே, ஏற்கெனவே சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால், சென்னை பெருநகரத்திற்கு 2 ஆம் முழுமைத் திட்டத்தைக் கொண்டுவந்து கடுமையாக இருந்த விதிமுறைகளையெல்லாம் எளிமைப்படுத்தி இருக்கின்றோம். அதன் அடிப்படையிலே மேலும் இதை எளிமைப்படுத்த வேண்டும் என்கின்ற காரணத்திற்காகவும், இதனால் கட்டடங்களை இடிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்கின்றபோது அதனால் பொது மக்களிடையே ஏற்படுகின்ற இன்னல்கள் இவற்றையெல்லாம் தீர சிந்தித்து ஆலோசித்து ஒரு நல்ல முடிவை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக ஓய்வுபெற்ற நீதியரசர் மாண்புமிகு திரு. மோகன் அவர்களைக் கொண்டு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு, அந்த

2010 நவம்பர் 12] [திரு. பரிதி இளம்வழுதி]

கமிட்டியினுடைய ஆலோசனைகள் அரசுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவை அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கின்றன. இந்த நிலையிலே ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் குறிப்பிட்ட அந்த வழக்கானது ஜனவரி 2011-லே வர இருக்கிறது. இதற்கிடையிலே கொண்டுவரப்பட்ட அவசரச் சட்டத்தைச் சட்டமாக்க வேண்டிய அவசியம் இருக்கின்ற காரணத்தால் அதற்கான சட்டமுன்வடிவை இப்போது உங்கள் முன்னால் வைத்திருக்கிறோம். எனவே, இதை ஏற்று இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "26-7-2010 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2010) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்னும் திரு. செ.ம. வேலுசாமி அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) எண் 2 சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2010) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) எண் 2 சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2010 நவம்பர் 12] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஇ) தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2010), மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

@ 12–11–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

11-335—43a